**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண் : 197** **நாள் : 05.12.2018**

**கஜா புயலால் பாதிக்கப்பட்ட தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களில் மீட்புப் பணிகளை மேற்கொள்ள 150 மர அறுவை இயந்திரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான மாண்புமிகு அம்மா அவர்களின் அரசானது, கஜா புயலால் பாதிக்கப்பட்ட தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை சீரமைக்க போர்க்கால அடிப்படையில் செயல்பட்டு வருகின்றது. புயல் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் களப்பணியாற்ற தொடங்கி, தற்போது வரை மறுசீரமைப்பு பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத்திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களின் அறிவுறுத்தலின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக, கஜா புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு 19.11.2018 அன்று பொதுமக்களுக்கு தேவைப்படும் அரிசி, பால் பவுடர், ரொட்டி, குடிநீர் பாட்டில், உடைகள் உள்ளிட்ட 15 வகையான அத்தியாவசிய பொருட்கள், 10 எண்ணிக்கையிலான மரம் அறுக்கும் இயந்திரங்கள், மரம் வெட்டும் கத்தி மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் ஆகியவைகள் 51 தொழிலாளிகளுடன் அனுப்பி வைக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, நிவாரணப் பணிகளை துரிதப்படுத்தும் பொருட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக, கஜா புயலால் பாதிக்கப்பட்ட தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களுக்கு, புயலால் சாய்ந்த மற்றும் கீழே விழுந்த மரங்களை வெட்டி அகற்ற பெருநகர சென்னை மாநகராட்சி பூங்கா துறை மூலம் 01.12.2018 மற்றும் 02.12.2018 ஆகிய நாட்களில் தலா 50 மர அறுவை இயந்திரங்கள் என 150 மர அறுவை இயந்திரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**